இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இந்த நிகழ்வு மகிழ்ச்சியான, பன்முக கலாச்சாரக் கூடுதலாக (gathering) இருக்க வேண்டும் என்றும், குறிப்பாக, போர் நிகழும் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு அமைதி மற்றும் ஒன்றிப்புக்கான அடையாளத்தை வழங்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும் என்றும் தெரிவித்தார் பேராயர் ஃபிசிகெல்லா.

# உரோமையில் இளையோருக்கான யூபிலி விழா!



தென் ஆப்பிரிக்க இளையோர்

ஒட்டுமொத்தமாக, இந்த ஆண்டு விழா, உலக இளையோரிடையே அமைதி, ஒன்றிப்பு மற்றும் ஆன்மிக புதுப்பித்தலை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஒட்டுமொத்தமாக, இந்த ஆண்டு விழா, உலக இளையோரிடையே அமைதி, ஒன்றிப்பு மற்றும் ஆன்மிக புதுப்பித்தலை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

செல்வராஜ் வசைமாணிக்கம் - வத்திக்கான்

எதிர்நோக்கின் யூபிலி ஆண்டின் ஒரு பகுதியாக, இளையோருக்கான யூபிலி விழா, ஜூலை 28 முதல் ஆகஸ்ட் 3 வரை உரோமையில் சிறப்பிக்கப்படும் என்று செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் கூறினார் புதிய வழிகளில் நற்செய்தி அறிவித்தலை ஊக்குவிக்கும் திருப்பீடத்துறையின் தலைவர் பேராயர் ரானோ ஃபிசிகெல்லா.

### யூபிலி விழாவின் நோக்கம்

இந்த நிகழ்வு மகிழ்ச்சியான, பன்முக கலாச்சாரக் கூடுதலாக (gathering) இருக்க வேண்டும் என்றும், குறிப்பாக, போர் நிகழும் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு அமைதி மற்றும் ஒன்றிப்புக்கான அடையாளத்தை வழங்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும் என்றும் தெரிவித்தார் பேராயர் ஃபிசிகெல்லா.

### இளையோரின் மொத்த எண்ணிக்கை

146 நாடுகளைச் சேர்ந்த ஏறத்தாழ 5,00,000 இளைஞர்கள் இவ்விழாவில் பங்கேற்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும், அவர்களில் 78 விழுக்காட்டினர் ஐரோப்பாவிலிருந்தும், மோதல்களால் பாதிக்கப்பட்ட நாடுகளான ஈராக், தெற்கு வடான் மற்றும் லெபனோனிலிருந்தும் வருவார்கள் என்றும் கூறினார் பேராயர் ஃபிசிகெல்லா.

### தங்குமிடம் மற்றும் ஏற்பாடுகள்:

இவ்விழாவில் பங்கேற்கும் இளையோர் கோவில்கள், பள்ளிகள், உடற்பயிற்சிக் கூடங்கள் மற்றும் உள்ளூர் குடும்பங்களுடன் தங்குவார்கள் என்றும், 20 உணவு நிலையங்கள் மற்றும் 3,500 விற்பனையாளர்கள் மூலம் அவர்களுக்கு உணவு வழங்கப்படும் என்றும் இச்செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார் பேராயர் ஃபிசிகெல்லா.

### முக்கியமான நிகழ்வுகள்

#### நகரத்துடன் உரையாடல்:

ஜூலை 29 செவ்வாய் முதல் ஜூலை 31 வியாழன் வரை, உரோமை நகர சதுக்கங்களில் 70 நிகழ்வுகள் நடைபெறும், இதில் நாடகம், ஊடாடும் கண்காட்சிகள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் பங்கேற்பு (எ.கா., காரித்தாஸ், மேரியின் உணவுகள்) உள்ளிட்டவை இடம்பெறும்.

#### அதிகாரப்பூர்வ வரவேற்புத் திருப்பலி:

ஜூலை 28, திங்களன்று, புனித பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் அதிகாரப்பூர்வ வரவேற்புத் திருப்பலி நடைபெறும்.

#### பாவ ஏற்பு அறிக்கை நாள்:

ஆகஸ்ட் 1, வெள்ளிக்கிழமையன்று, சர்க்கஸ் மாக்சிமஸ் (Circus Maximus) எனப்படும் பண்டைய உரோமானிய தேர்-பந்தய அரங்கம் மற்றும் பொதுமக்கள் பொழுதுபோக்கு இடம் ஒன்றில், 200 அருள்பணியாளர்கள் ஒப்புரவு (பாவ மன்னிப்பு) வழங்குவர்.

#### திருத்தந்தையுடன் திருவிழிப்பு நிகழ்வு:

ஆகஸ்ட் 2, சனிக்கிழமையன்று, உரோமைப் பல்கலைக் கழகத்தில் (University of Rome Tor Vergata) இடம்பெறும் திருவிழிப்பு நிகழ்வில் மூன்று இளைஞர்களின் கேள்விகளுக்குப் பதிலளிப்பார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

#### நிறைவுவிழாத் திருப்பலி:

ஆகஸ்ட் 3, ஞாயிற்றுக்கிழமையன்று, திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களின் தலைமையில் இடம்பெறும் கூட்டுத் திருப்பலியுடன் இளையோருக்கான யூபிலி விழா நிறைவடைந்தது.

செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

# தேசிய சிறுபான்மையினர் ஆணையம் மீண்டும் செயல்பட வேண்டும்!

சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட ஓர் அரசு அமைப்பான தேசிய சிறுபான்மையினர் ஆணையத்தில் (NCM) நியமனங்கள் இல்லாதது குறித்து இந்தியாவில் உள்ள கிறிஸ்தவர்கள் உட்பட, மதச் சிறுபான்மையினத் தலைவர்கள் கவலை கொண்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளது யூக்கான் செய்தி நிறுவனம்.

முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், பார்சிகள் மற்றும் சைனர்கள் உள்ளிட்ட ஆறு சிறுபான்மைச் சமூகங்களின் பிரதிநிதித்துவம் கொண்ட இந்த ஆணையத்தின் தலைவர் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கான இடம் நிரப்பப்படாமல் காலியாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதையும் எடுத்துக்காட்டியுள்ளது அச்செய்தி நிறுவனம்.

இவ்வாணையத்தின் கடைசி கிறிஸ்தவப் பிரதிநிதி கடந்த 2020-ஆம் ஆண்டில் வெளியேறினார் என்றும், காலியிடங்களை நிரப்ப 2021-ஆம் ஆண்டு டெல்லி உயர் நீதிமன்றம் உத்தரவிட்ட போதிலும், அரசு அதற்கான எவ்வித முயற்சியையும் மேற்கொள்ளவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளது அச்செய்தி நிறுவனம்.

மணிப்பூரில் பல கிறிஸ்தவர்கள் பாதிக்கப்பட்டு, நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் கிறிஸ்தவர்கள் மீதான துன்புறுத்தல் மற்றும் இன வன்முறை அதிகரித்துள்ள நிலையில், இந்தச் சிறுபான்மையினர் ஆணையம் செயலற்றதாகவும் பயனற்றதாகவும் இருப்பதாக விமர்சகர்கள் கூறுகின்றனர் என்றும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய மக்கள் தொகையில் ஏறத்தாழ 18 விழுக்காடாக இருக்கும் சிறுபான்மையினர் சமூகங்களைச் சிறப்பாகப் பாதுகாக்க, பிரதமர் நரேந்திர மோடி மற்றும் பாஜக தலைமையிலான அரசு உடனடியாக இந்த ஆணையத்திற்குப் பிரதிநிதிகளை நியமிக்க வேண்டும் என்று சிறுபான்மையினத் தலைவர்கள் கேட்டுக்கொண்டுள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளது இச்செய்தி நிறுவனம்.

செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

# எதிர்நோக்கின் யூபிலி ஆண்டு

ஈப்போ, புனித லூர்து மாதா தேவாலயத்தின் பங்கு தந்தை அருட்பணியாளர் ரோபர்ட் டேனியல் அவர்களின் அரிய முயற்சியினால், இந்தியா பெங்களூர், கோயம்புத்னர் இரட்சகர் சபையைச் சார்ந்த இரு அருட்பணியாளர்களான, அருட்பணியாளர் கிறிஸ்தோபர், அருட்பணியாளர் ஜோன்சன் ஆகியோரைப் பங்கு மறைப்பணியும், ஆன்மீக புதுப்பித்தலுக்காக பங்கு மக்களோடு தியானிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி குருவானவர்கள் ஒரு மாத காலம் இங்கு தங்கி மக்களோடுப் பயணித்தனர்.

முதல் வாரம், எதிர்நோக்கின் யூபிலி ஆண்டு என்ற தலைப்பில் எளிய முறையில் பல முக்கிய கருத்துக்களை எடுத்துரைத்தார் அருட்பணியாளர் கிறிஸ்தோபர். இந்த யூபிலி ஆண்டானது 1300ம் ஆண்டு திருத்தந்தை பெனவெஸ் அவர்கள், புனித கத்தோலிக்க திரு அவையால் கொண்டாட வேண்டிய யூபிலி ஆகும் என ஆலோசனை வழங்கினார். ஏனெனில், விவிலியத்தில் லேவியர் ஆகமம் 25ம் அதிகாரத்தில் யூபிலி பற்றிய விவரங்கள் அடங்கியுள்ளது என்றார். இது 100 ஆண்டுகளுக்கு ஒரு முறை கொண்டாடப்படும் என்றார். அதனை தொடர்ந்து, 1470ம் ஆண்டு திருத்தந்தை பவுல் அவர்கள், இந்த யூபிலி ஆண்டானது 25 ஆண்டுகளுக்கு ஒரு முறை கொண்டாடப்பட வேண்டும் என்றார்.

இந்த யூபிலி ஆண்டு மனிதரால் உருவாக்கப்பட்டதல்ல. கடவுளால் நமக்கு கொடுக்கப்பட்ட ஒரு வரமாகும். லேவியர் 25:10ல் "ஐம்பதாம் ஆண்டை தூயதாக்கி, நாட்டில் வாழ்வோருக்கெல்லாம் தன்னுரிமை அறிவியுங்கள். அது உங்கள் யூபிலி ஆண்டு." இது, கடவுளின் பிரசன்னம் நம்மோடு தங்கும் ஆண்டு. இந்த யூபிலி ஆண்டில் கடவுளின் நிறையாசீர் அனைவருக்கும் உண்டு. மேலும் சிறப்பாக இது என்னுடைய யூபிலி ஆண்டு, தனிப்பட்ட முறையில் இறைவனின் ஆசீர்வாதம் எனக்குண்டு என எதிர்நோக்குதல். வாழ்வில் பலவற்றை இழந்து தவிப்போருக்கு இந்த யூபிலி ஆண்டு விடுதலையின் ஆண்டாகும். மேலும் தன்னுரிமை பெற வல்ல ஆண்டாகும் எனவும் இந்த தியானத்தில் வலியுறுத்தப்பட்டது.

இப்பொழுது எதிர்நோக்கின் யூபிலி ஆண்டில் பயணிக்கும் நாம், நமது எதிர்நோக்கு ஒரு போதும் ஏமாற்றம் தராது என விவிலிய அடிப்படையில் எடுத்துரைத்தார் குருவானவர். உரோமையர் 5:5: "அந்த எதிர்நோக்கு ஒரு போதும் ஏமாற்றம் தராது. ஏனெனில், நாம் பெற்றுள்ள தூய ஆவியின் வழியாய் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது". எனவே, நமது நம்பிக்கையானது ஐயம் அற்ற நிலையிலும், எதிர்நோக்கானது, எதிர்காலத்தின் உறுதிப்பாட்டில் நிலைத்திருப்பதாகும் மேலும், ஒருவரின் மனவுறுதி தகைமை எனும் பண்பிற்கு இட்டுச் செல்கிறது. இதுவே, எதிர்நோக்கை அளிக்கிறது. மற்றும் நாம் எதிர்க்கொள்ளும் இன்னல், இடையூறுகள், துன்பங்துஙகளின் போது கடவுளுக்கு நன்றிக்கூற வேண்டும். இது ஒரு மாற்றுக் கருத்தாக இருந்தாலும், துன்பமானது அதிலிருந்து மீண்டு வர மன உறுதியை அளிக்கிறது. அதன்வழி தகைமையை அடைகின்றோம். அதாவது, பண்பினை பெறுகின்றோம். இப்பண்பானது நம்பிக்கையான எதிர்நோக்கிற்கு அழைத்துச் செல்கின்றது என விவரித்தார் குருவானவர்.

மேலும், லேவியர் 25ல் குறிப்பிட்டதுப் போல இந்த யூபிலி ஆண்டில் நாம் செய்ய வேண்டிய நான்கு செயல்களை விவரித்தார்:


1) நிலத்திற்கு ஓய்வு: நான் தான் அந்த நிலம். உலக நாட்டத்திற்கு ஓய்வுக் கொடு. உன் நேரத்தை கடவுளோடு இணைந்து இரு. ஏனெனில், இது கடவுள் அறிவித்த ஆண்டு. முழுமையாய் நம்மை இறைவனிடம் ஒப்புக்கொடுத்து திருப்பலி, செபம், இரக்கச் செயல்களில் ஈடுப்பட்டு, அவரின் ஆசீரை பெற்றிட முயல வேண்டும்.
2) நிலத்தை உரிமையாளரிடம் ஒப்புவித்தல்: என் வாழ்வு என் சொத்து. சொத்தான என் வாழ்வை கடவுளிடம் அர்ப்பணிக்க வேண்டும். உரோமையர் 12:1: "கடவுளுக்கு உகந்த தூய உயிருள்ள பலியாக உங்களைப் படையுங்கள்". புனித அகஸ்தினார் கூறியது போல, கடவுளோடு இணையும் வரை பல போராட்டங்களை நாம் சந்திக்க நேரிடும்.
3) ஏழைகளுக்கு உதவுதல்: முடிந்த வரை எந்த விதத்திலும் பிறருக்கு உதவுதல் ஓர் ஆசீராக மாறும்.
4) அடிமைகளுக்கு விடுதலை: பாவ வாழ்விலிருந்து மீளுதல். கலாத்தியர் 5:19ல் குறிப்பிடப்பட்ட பாவங்களிலிருந்து மீண்டு, நம் வாழ்வு பரிசுத்தமாக்கப் பட வேண்டும் என விவரித்தார்.

தொடர்ந்து எதிர்நோக்கின் பயணம், கிறிஸ்துவ வாழ்வின் ஒரு பயணமாகும் என விளக்கினார் குருவானவர். இயேசுவை சந்திப்பதே நமது பயணமாகும். அவரை பற்றி அறிக்கையிடுவதே நமது கடமையாகும். எபிரேயர் 11:13: 'இவ்வுலகில் நாங்கள் அன்னியர் என்பதையும் தற்காலிக குடிகள் என்பதையும் ஏற்றுக்கொண்டார்கள்.' அவ்விதமே, நமது வாழ்வும் இவ்வுலகில் தற்காலிகமானதே என அறிதல் வேண்டும். இயேசுவே நமது வாழ்வும், வழியும், உண்மையுமாவார். எனவே, கடவுள் இல்லாத பாவ வாழ்வை விட்டு, குறிக்கோள் இல்லாத வாழ்க்கை முறையை தவிர்த்து, மேய்ப்பன் குரலுக்கு செவிக்கொடா நிலையை விட்டு, ஆயனோடு பிணைப்பு இல்லா தருணத்தை விட்டு, இறைவனோடு ஒன்றித்திடுவோம். அவரே நமது மனசாட்சி. எனவே, கடவுளுக்கு கீழ்ப்படிந்து அவரின் திருவுளத்தை நிறைவேற்றுவோம். இடுக்கமான வாயிலில் செல்ல முன் வருவோம் என தெளிவுர விவரித்தார் அருட்பணியாளர் கிறிஸ்தோபர் அவர்கள்.

ஒவ்வொரு புனிதருக்கு ஒரு கடந்தக் காலம் உண்டு;
ஒவ்வொரு பாவிக்கும் ஓர் எதிர்காலம் உண்டு.

அன்புடன்: குளோரியா மெத்யூஸ்

# மறைப்போதக ஞாயிறு 2025




## கருப்பொருள்: இந்த உலகை நம்மால் சிறந்த இடமாக மாற்ற முடியும்

இந்த ஆண்டின் மறைப்போதக ஞாயிறுக்கான கருப்பொருள் நமக்கு மிகவும் சவாலான கேள்வியை அளிக்கிறது: நாம் வாழும் இந்த உலகத்தை சிறந்த இடமாக மாற்ற கிறிஸ்தவர்களாக நாம் என்ன செய்ய முடியும்? திருத்தூதர் பவுலின் அறிவுரையின் படி, "நீங்கள் யாவரும் உங்களைச் சார்ந்தவற்றில் அல்ல, பிறரைச் சார்ந்தவற்றிலேயே அக்கறை கொள்ள வேண்டும்." (பிலி 2:4). பிலிப்பியில் உள்ள கிறிஸ்தவர்களை ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துமாறு திருத்தூதர் பவுல் வலியுறுத்துகிறார். 4 ஆம் இறைவசனத்தில், கிறிஸ்தவர்களாகிய நாம் சுயநலமற்றவர்களாகவும், நமது சொந்த தேவைகளைப் பற்றி மட்டுமல்ல, மற்றவர்களின் தேவைகளைப் பற்றியும் அக்கறை கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்திகிறார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும், மற்றவர்களை கவனித்துக் கொள்ளவும் நாம் தயாராக இருக்கவேண்டும். கத்தோலிக்கத் திருஅவையின் கண்ணோட்டத்தில் இந்த உலகத்தை சிறந்த இடமாக மாற்றுவது குறித்து பரிசுத்த வேதாகமத்திலும் திருஅவையின் போதனைகளிலும் நமது ஆண்டவராகிய இயேசுவின் போதனைகளிலும் ஆழமாக வேரூன்றியுள்ளது. அது எப்போதும் அன்பு, சேவை மற்றும் நன்னெறி வழி நடப்பதின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. இந்த அணுகுமுறை ஒவ்வொரு கத்தோலிக்கத் தனிநபரும் தங்கள் சமூகங்களில் தீவிரமாக ஈடுபடவும், இரக்கம் மற்றும் நீதியின் உணர்வை வளர்க்கவும் ஊக்குவிக்கிறது. கத்தோலிக்கத் திருஅவையின் போதனையின் மையமாக "ஒருவரையொருவர் அன்பு செய்ய வேண்டும்" என்ற கட்டளை உள்ளது (யோவான் 13:34). கத்தோலிக்க திருஅவையின் மறைபோதகம் பிறரன்பு என்பது கடவுளின் அன்பிலிருந்து பிரிக்க முடியாதது என்பதை வலியுறுத்துகிறது (CCC 1878). கத்தோலிக்கர்கள் சமூக நீதியை ஊக்குவிக்க அழைக்கப்படுகிறார்கள், இது வறுமை, சமத்துவமின்மை மற்றும் வன்முறைக்கான மூல காரணங்களை நிவர்த்திச் செய்வதை உள்ளடக்கியது. உண்மையான நீதி வெறும் தொண்டுக்கு அப்பாற்பட்டது என்று திருஅவை கற்பிக்கிறது; அதற்கு முறையான மாற்றம், அரசியல் செயல்முறைகளில் ஈடுபடுதல், நியாயமான தொழிலாளர் நடைமுறைகளை ஆதரித்தல் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் கொள்கைகளுக்கு வாதிடுதல் ஆகியவையும் தேவை.

உலகை சிறந்த இடமாக மாற்றுவதில் மற்றொரு முக்கியமான அம்சம் சுற்றுச்சூழல் மேலாண்மை. மறைந்தத் திருத்தந்தை பிரான்சிஸின் "Laudato Si" என்ற சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளபடி, படைப்பைப் பராமரிப்பதற்கான தார்மீக பொறுப்பை திருஅவை அங்கீகரிக்கிறது. சுற்றுச்சூழல் சீரழிவு மற்றும் காலநிலை மாற்றத்தை நிவர்த்தி செய்வதற்கான கூட்டு முயற்சியை இந்த ஆவணம் கோருகிறது, கத்தோலிக்கர்கள் நிலையான நடைமுறைகளை ஏற்றுக்கொள்ளவும், எதிர்கால சந்ததியினருக்கு நமது இந்த பூமியைப் பாதுகாக்கும் கொள்கைகளை ஆதரிக்கவும் வலியுறுத்துகிறது. சுற்றுச்வழலை நோக்கி ஒரு பொறுப்புணர்வு உணர்வை வளர்ப்பதன் மூலம். நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்த உறுதிபூண்டுள்ள நபர்களை வடிவமைப்பதில் கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது. கல்வி வீட்டிலிருந்து தொடங்க வேண்டும், மேலும் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை இளம் வயதிலேயே கல்வி கற்பிப்பதில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றனர். குடும்பத்தில் உள்ள குழந்தைகளிடமும் இளைஞர்களிடமும், கத்தோலிக்க மறை போதனை வகுப்புகளிலும் இரக்கம், நேர்மை மற்றும் சேவையின் மதிப்புகளை ஊக்குவித்தல் அவசியமாகுகிறது. சமூக சவால்களைச் சமாளிக்கத் தயாராக இருக்கும் எதிர்காலத் தலைவர்களைத் தயார்படுத்துவதில் கத்தோலிக்க நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. பொது நன்மைக்கு முன்னுரிமை அளித்து சிறந்த உலகத்தை உருவாக்க முயற்சிக்கும் ஒரு தலைமுறையை வளர்ப்பதற்கு கல்விக்கான இந்த முழுமையான அணுகுமுறை அவசியம். டிசம்பர் 30, 2020 அன்று வத்திக்கானில் நடந்த பொதுக் கூட்டத்தில், மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ், உலகத்தை சிறந்த இடமாக மாற்றுவதற்கான அடிப்படை வழிகளாக, நமது பகிரப்பட்ட மனிதநேயத்தை அங்கீகரித்து நன்றியுணர்வு மற்றும் கருணையுடன் செயல்படுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். தனிநபர்கள் ஒருவரையொருவர் உறவினர்களாகப் பார்க்க அவர் ஊக்குவித்தார், அனைத்து மக்களிடையேயும் சகோதரத்துவ உணர்வை ஊக்குவித்தார். உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கையை நடத்துவதில் நன்றியுணர்வின் பங்கையும் அவர் எடுத்துக்காட்டினார். "நன்றியுணர்வைத் தாங்குபவர்கள்" என்பது உலகை மேம்படுத்துவதற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளிக்கும் என்று அவர் நம்பினார். நன்றியையும் பாராட்டையும் வெளிப்படுத்துவதன் மூலம், தனிநபர்கள் கருணை மற்றும் தாராள மனப்பான்மையை ஊக்குவிக்கும் ஒரு நேர்மறையான சூழலை வளர்க்க முடியும்.

"Fratelli Tutti" என்ற தனது சுற்றறிக்கையில், மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் உலகளாவிய சகோதரத்துவத்தின் ஒரு பார்வையை வெளிப்படுத்தினார், நாம் அனைவரும் பொது நன்மைக்காக ஒன்றிணைந்து செயல்பட அழைக்கப்படுகிறோம். ஒரு சிறந்த உலகத்தை உருவாக்குவதற்கு கூட்டு முயற்சி மற்றும் சமூக நீதிக்கான அர்ப்பணிப்பு தேவை என்று அவர் வலியுறுத்தினார், மக்கள் இரக்கத்துடன் செயல்படவும், ஒதுக்கப்பட்டவர்களுக்காக வாதிடவும் வலியுறுத்தினார். இந்த உலகில் பொதுவான வீட்டில் நாம் அனைவரும் ஒரே குடும்பமாக வாழ்கிறோம். மேலும் உலகை மீட்டெடுக்க உறுதியான நடவடிக்கைகளை முன்மொழிந்தார். இன்று உலகில் வழ்ந்துள்ள இருண்ட மேகங்களைப் பற்றி அவர் பேசினார். இந்த இருண்ட மேகங்களிலிருந்து நம்மை வெளியேற்றும் நம்பிக்கையின் பாதைகள் அன்பு, நீதி மற்றும் ஒற்றுமையைக் கொண்டுள்ளன. இந்த மூன்று நற்பண்புகளும் சுற்றறிக்கை முழுவதும் முக்கியத்துவத்துடன் வெளிப்படுத்தப்படுகின்றன, இது திருஅவையின் சமூக போதனைகள் பற்றிய சில நுண்ணறிவுகளை நமக்கு வழங்குவதுடன் நமது உறுதியான சூழ்நிலைகளுக்குப் பொருந்துவதாக உள்ளது. இந்த நம்பிக்கை ஆண்டு விழாவில், மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் நம்மை நம்பிக்கையின் திருப்பயணிகளாக இருக்க அழைத்துள்ளார், மேலும் போர்கள், சமூக அநீதிகள் மற்றும் பல்வேறு வகையான வன்முறைகளால் சூழப்பட்ட உலகில் அன்பைத் தேர்ந்தெடுக்க அனைவரையும் ஊக்குவிக்கிறார். "நாங்கள் அன்பைத் தேர்ந்தெடுக்கிறோம், அன்பு நம் இதயங்களை ஆர்வமாகவும் நம்பிக்கையுடனும் ஆக்குகிறது. "அன்பை நமது ஒவ்வொரு செயலிலும் வெளிப்படுத்தலாம், "அது இதயங்களை ஏற்றுக்கொள்ளத் திறக்கிறது மற்றும் நாம் மேலும் பணிவாக மாற உதவுகிறது" என்று அவர் கூறுகிறார். அவர் தொடர்ந்து பணிவைக் குறித்து கூறுகிறார், "ஒருவருடன் நமது உரையாடலைத் தொடங்க தன்னைத்தானே கொடுக்கிறது, தவறான புரிதல்களைக் கடக்க உதவுகிறது, நன்றியுணர்வை உருவாக்குகிறது."

உலகத்தை ஒரு சிறந்த இடமாக மாற்றுவது மிகவும் கடினம் என்பதை மறுக்க முடியாது. சிலருக்கு அதை அடைய முடியாது. இயேசு தம் சீடர்களிடம் கூறினார்; "மனிதனால் அது சாத்தியமற்றது, ஆனால் கடவுளால் அல்ல. ஏனென்றால் கடவுளால் எல்லாம் சாத்தியம்." (மாற்கு 10:27). இயேசுவின் இந்த வார்த்தைகள், நாம் விசுவாசம் கொண்டு அவர் மீது நம்பிக்கை வைத்தால், முடியாத காரியங்களைச் செய்ய நமக்கு நம்பிக்கையைத் தருகின்றன. இயேசு இவ்வாறு கூறுகிறார்; "உண்மையிலேயே, கடுகு விதையைப் போல விசுவாசம் இருந்தால், இந்த மலையைப் பார்த்து, 'இங்கிருந்து அங்கே போ' என்று நீங்கள் கூறினால், அது நகரும், எதுவும் உங்களுக்கு முடியாததாக இருக்காது." (மத் 17:20). கடவுளால் எல்லாம் சாத்தியம் என்று நமது ஆண்டவர் இயேசு நமக்கு உறுதியளித்தார். கடவுளின் வல்லமையால் உலகை ஒரு சிறந்த இடமாக மாற்ற முடியும். பரிசுத்த ஆவியானவர் அனைத்து கிறிஸ்தவர்களையும் அமைதி, நீதி மற்றும் இரக்கத்தின் முகவர்களாக இருக்கவும், உலகை கடவுளுடைய இறைஅரசின் பிரதிபலிப்பாக மாற்றவும் தூண்ட வேண்டும் என்று நாங்கள் பிரார்த்திக்கிறோம்.

தயாரிப்பு
அருள்பணி போனிஃபேஸ் கிம்சின்
Rev. Fr. Boniface Kimsin

# ஆண்டின் பொதுக்காலம்-18-ஆம் ஞாயிறு

## 'செல்வம் கண்டிப்பாக ஒருநாள் நம்மை விட்டுச் செல்லும்'

இன்றைய நற்செய்தியில் சொத்து அடிப்படையில் இரு சகோதரர்களுக்கு இடையே எழுந்த விவகாரத்தைப் பற்றி வாசிக்கிறோம். கூட்டத்தில் பெயர் குறிப்பிடப்படாத ஒருவர் கேள்வி ஒன்றை இயேசு ஆண்டவரிடம் எழுப்புகிறார். இது இன்றும் நடைமுறையில் எழுகின்ற சிக்கல்தான். ஆகவே, 'பெயரில்லாத இந்த நபரில்' நாம் நம் ஒவ்வொருவரையும் வைத்துப் பார்க்கலாம்.

அவர், 'போதகரே, சொத்தை என்னோடு பங்கிட்டுக் கொள்ளுமாறு என் அண்ணனுக்குச் சொல்வீரா?' என்று கேட்கின்றார். மோசே வழங்கிய சட்டத்தின்படி குடும்ப சொத்தானது, தம்பிக்கு ஒரு பகுதியும் அண்ணனுக்கு ஒரு பகுதியுமாகப் பகிரப்பட வேண்டும் என்று இணைச்சட்டம் கூறுகிறது (21:27). ஆனால், நற்செய்தியில் அண்ணனோ, தன் தம்பிக்குச் சேர வேண்டியதைக் கொடுக்க மறுக்கிறார்.

சில நேரங்களில் 'போட்டு வாங்குதல்' என்பது பிரச்சனைகளைத் தீர்க்க சிறந்த வழிமுறையாக அமையும். இதன் அடிப்படையில், இயேசு விடையாக மற்றொரு கேள்வியைப் போடுகின்றார்: 'என்னை உங்களுக்கு நடுவராகவோ பாகம் பிரிப்பவராகவோ அமர்த்தியவர் யார்?' முதல் ஏற்பாட்டில் இம்மாதிரி வேலையை மோசே செய்திருக்கிறார் (விப 2:14, எண் 27:1-11). இயேசுவின் கேள்வி அறிவுரையாக மாறுகின்றது: 'எவ்வகைப் பேராசைக்கும் இடம் கொடாதவாறு எச்சரிக்கையாய் இருங்கள். மிகுதியான உடைமைகளைக் கொண்டிருப்பதால் ஒருவருக்கு வாழ்வு வந்துவிடாது!' என்கிறார்.

இயேசுவின் அறிவுரையைக் கூர்ந்துக் கவனித்தால் இரு விடயங்கள் புலப்படும்.

1. பேராசை அறவே கூடாது.
2. உடைமைகள் (சொத்தால்) ஒருவருக்கு வாழ்வு வருவதில்லை.

தொடர்ந்து, இயேசு அந்த நபரிடம் மற்றொரு உவமை வழி உண்மையை உணர்த்துகிறார். 'அறிவற்ற செல்வன்' என்று இந்த உருவகத்திற்கு பெயர் தரப்படுகின்றது. செல்வம் அதிகரிக்க அதிகரிக்க பேராசை அந்த உழைப்பாளியை ஆட்கொள்கிறது. 'தானியத்தைக் கொள்வதற்கு கிடங்கு போதாது' என்று அதை மேம்படுத்த 'நான் களஞ்சியத்தை இடித்து இன்னும் பெரிதாகக் கட்டுவேன்,' 'என் தானியத்தையும் பொருள்களையும் சேர்த்து வைப்பேன்,' என் நெஞ்சிடம் சொல்வேன்!' மேலும், 'நான்,' 'என்,' 'எனது' என்னும் வார்த்தைகள் இந்தச் செல்வர் எந்த அளவுக்கு தன்னை மட்டுமே மையப்படுத்தியவர் என்பதையும் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. இதுவரைக்கும் அவர் செய்தது சரிதான். ஆனால், இதற்குப் பின் அவர் தன் உள்ளத்தைப் பார்த்துச் சொல்லும் வார்த்தைகள்தாம் இயேசுவைப் பொறுத்தவரையில் தவறாகின்றன.

கடவுளின் பார்வையில் மனிதனின் எண்ணம் சுக்கு நூறாக நொறுங்கியது. 'எல்லாம் எனக்கே' என்று நினைத்த செல்வரிடம், 'இதெல்லாம் வேறொருவருடையதாகும்!' என்கிறார் கடவுள்.

நிறைவாக, நாம் அறிய வேண்டியது யாதெனில், நாம் சேர்த்து வைக்கும் சொத்துக்களை, செல்வத்தை நாம் எடுத்துச் செல்ல முடியாது, அதை நாம் எடுத்துச் செல்ல முடியாதது மட்டுமல்ல, அதற்கு உரிமை இல்லாத, அதற்காக உழைக்காத ஒருவருக்கு அனைத்தையும் விட்டுச்செல்ல வேண்டும் என்பதே உண்மை. இதை, உணர்த்தியே, முதல் வாசகம் 'வீண், முற்றிலும் வீண்!' என்று எடுத்துரைக்கிறது.

இக்கருத்தை மையமிட்டு, இரண்டாம் வாசகத்தில், கிறிஸ்தவ வாழ்வின் பண்புகள் பற்றி பவுல், கிறிஸ்துவோடு ஒருவர் இணைந்து உயிர் பெற்றதன் அடையாளம் 'மேலுலகு சார்ந்தவற்றை நாடுவது' என்கிறார். நாம் வாழ்நாளில் எதற்கு உழைக்கிறோம்? 'செல்வம் கண்டிப்பாக ஒருநாள் நம்மை விட்டு செல்லும்' என்பதை இயேசு நினைவூட்டுகிறார்.

- ஆர்.கே. சாமி, காஜா

பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்

உங்கள் பங்குகளில் நடைப்பெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.